திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்குவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகள், இதற்குச் சம்பந்தமில்லாத அவர்கள் அங்கே பணியாற்றுவது தான் முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறதே, இதனை அரசு அறியுமா, அதை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கோடிட்டுச் சொல்லி இருக்கிறேன். 1988 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருக்கின்ற விதி 145-ன் கீழ்தான், இன்றையதினம் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் சிறப்பானவையாக இருந்தாலும் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியிருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கான தக்க ஆலோசனை வழங்குவார்களேயானால், தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களோடு கலந்தாலோசித்து, இதற்கு எந்தவிதத்தில் மாறுதல் செய்தால் ஆலைகள் சிறப்பாக அமைவதற்கு வழிவகை இருக்கும் என்பதை ஆராயலாம் என நான் துணைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 391, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

391—

தெங்குமரஹாடா கிராமத்திற்குச் செல்ல சிறிய ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

*9468—டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெங்குமரஹாடா என்ற குன்னூர் தொகுதியில் உள்ள கிராமத்திற்குச் செல்ல சிறிய ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டத்திற்கான செயற்குறிப்பு மத்திய சாலை நிதித் திட்டத்தில், மைய அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு கிடைத்தால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குன்னூர் தொகுதியிலுள்ள தெங்குமரஹாடா கிராமம் அடர்ந்த காட்டின் நடுவில் அமைந்துள்ளது. மூன்று புறமும் அடர்ந்த காடுகளையும், உயர்ந்த பாறைகளையும், ஒரு புறம் ஒரு பெரிய காட்டாற்றையும் தன் எல்லையாகக் கொண்டுள்ள சிறிய கிராமம் அது. பரிசல் மூலமாகத்தான் அந்த கிராமங்களுக்குச் செல்ல முடியும். தேர்தல் காலத்தில் ஓட்டுப் பெட்டிகளைக் கூட பரிசல் மூலமாகத்தான் கொண்டு சென்று இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 200 ஆண்டு காலமாக அங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் மழைக் காலங்களில் அந்த காட்டாற்றில் மிக அதிகமாக வெள்ளம் வருவதால், அந்தக் காட்டினுடைய பகுதியிலிருந்து மக்கள் கிராமத்திற்குள்ளே செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசிடமிருந்து எப்பொழுது கிடைக்கும்? அப்படி இல்லாவிட்டாலும் உடனடியாக ஒரு நடைபாலத்தையாவது அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற பாலம் கோத்தகிரி தாலுக்காவைச் சேர்ந்தது. பவானி செல்வதற்கு ஒரு தனிபாதை இருக்கிறது. இருந்தாலும் தற்போது அவர் கேட்கின்ற இடத்தில் மாயாறு என்ற ஆறு குறுக்கிடுகின்ற காரணத்தினாலே அந்தப் பாலம் அந்த ஆற்றிலே கட்டப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு ஏறத்தாழ 55 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே தான் சென்டிரல் ரோட்ஸ் ஃபண்டு ஸ்கீம்ஸ் என்ற அளவிலே பெரிய திட்டங்களை எல்லாம் சேர்க்கின்றோம். அதிலே இது சேர்க்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கு ஒரு 7 கோடிக்கு மேலே

[1993 ஏப்ரல் 19

நிதி தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி வருகின்ற போது, இந்தப் பாலத்திற்கு முன்னுரிமை கொடுத்து இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகா மசனகுடியிலிருந்து சிறியூர் வழியாக பவானி சாகர் மூலம் சத்தியமங்கலம் செல்லக்கூடிய ஒரு பாதை அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பப் பட்டுள்ளதா? அந்தப் பாதையை அமைப்பதற்கு ஆகின்ற செலவு எவ்வளவு? அப்படி வருகின்ற பாதையில் அந்தப் பாலம் கட்டப்படுமா? அல்லது தெங்குமரஹாடா என்ற கிராமத்திற்கு என்று இந்தப் பாலம் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மாயாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம். ஆகவே, அந்தக் கிராமத்திற்கு எத்தனை வழிகள் இருக் கின்றன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட வேண்டும். ஆனால் அவர் கேட்கிற பாலம் மாயாற்றின் குறுக்கே கட்டப் பட வேண்டிய பாலம். அதற்குரிய செலவுத் தொகை பற்றி நான் சொன்னேன். ஆகவே அதற்கான நிதியாதாரங்களை எப்படிப் பெறுவது என்பதையும் சொன்னேன். ஆகவே நான் ஏற்கெனவே தெரிவித்தது போல் இந்த மாயாற்றின் குறுக்கே கட்டப்படுகிற பாலம் மத்திய அரசினுடைய சென்ட்ரல் ரோட் ஃபண்ட் ஸ்கீம் என்று சொல்லப்படுகிற அந்தத் திட்டத்தின் கீழ் வந்தால் எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெங்குமரஹாடா என்பது நீலகிரி மாவட்டத்தில் ஒரு தனியான பகுதியில் உள்ளது. அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால் நீலகிரி மாவட்டம் மட்டும் அல்லாமல் வேறு இரண்டு மாவட்டங்களைக் கடந்து செல்ல வேண்டும். அதாவது கோவை மாவட்டத்தைத் தாண்டி, பெரியார் மாவட்டத்தைத் தாண்டி, அந்த குன்னூர் பகுதிக்குச் செல்ல வேண்டும்.

1993 ஏப்ரல் 19]

ஆகவே, எந்த ஒரு சூழ்நிலையிலும் அங்கு போகும்போது சிரமம் தான். அதுவும் மழைக்காலங்களில் அந்த ஊருக்குச் செல்வது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஊருக்குச் செல்வதற்கு அந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்து, மத்திய சர்க்காருக்கு மீண்டும் உடனடியாக ஒரு பரிந்துரையைச் சொல்லி உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருந்து நேரடியாகச் செல்வதற்கு இந்தப் பாலம் கட்டப்பட வேண்டும் என்றாலும் நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல் பெரியார் மாவட்டத்தின் வழியாகச் செல்வதற்கு வழி இருக்கிறது என்றும் சொன்னேன். ஆகவே நாம் அதை சுற்றிச் செல்ல வேண்டி இருக்கிறது என்பதில் இந்த அரசுக்குக் கருத்து மாறுபாடு இல்லை. நேரடியாக ஆற்றின் குறுக்கே சென்றால் மிக எளிதாகச் செல்ல லாம், பொதுமக்களுக்கும் உபயோகமாக இருக்கும் என்பதை இந்த அரசு நன்றாக அறிகிறது. ஆனால் இருக்கின்ற பிரச் சினை எல்லாம் நிதியாதாரங்களைப் பொறுத்தமட்டில் தான் இருக்கின்றன. வேறு ஒன்றும் இல்லை. ஆகவே நான் ஏற் கெனவே தெரிவித்தது போல் இந்த ஆண்டு வருகிற நிதியாதாரத் தைப் பொறுத்து முன்னுரிமை கொடுத்து எடுக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 392, திரு. கே. செல்வராஜ், திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

392—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கோயம்புத்தூரில் சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

*11896—திரு. கே. செல்வராஜ்:

திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கோயம்புத்தூர் காந்திபுரம்—டவுன்ஹால், ஒப்பனக்கார வீதி ஆகிய இடங்களில் சுரங்க நடைபாதை (Sub-way) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே,

திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.